[*1994 நவம்பர் 7*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தற்காலிக கல்வி சாராப் பணியாளர்கள் மொத்தம் 30 பேர்.

(ஆ) தற்போது நிதி நிலை நெருக்கடி உள்ளதால், நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும்போது, தேவைக்கேற்ப தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது தொடர்பாகக் கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்மையில் பெய்த மழை மற்றும் புயல் காரணமாக . . . . . (குறுக்கீடு)

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ரொம்ப முக்கியமான ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அது இல்லை. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் வந்து கேட்டீர்கள். (குறுக்கீடு) அதுவே இல்லை. (குறுக்கீடு) இப்படி கை தூக்குவது முறையில்லை. (குறுக்கீடு) அவர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் வந்து கேட்டீர்கள். வந்து கேட்டபோதே, இது தனிப்பட்ட பிரச்சினை, இதை அனுமதிப்பதற்கு இல்லை என்றேன். (குறுக்கீடு) பத்திரிகையில் எவ்வளவோ பிரச்சினைகள் வருகின்றன. பத்திரிகையில் வந்ததையெல்லாம் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இல்லை. பத்திரிகையிலே வருகிற பிரச்சினையையெல்லாம் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இதற்கு

1994 நவம்பர் 7] [பேரவைத் தலைவர்]

நீங்கள் சமுதாயப் பிரச்சினையை இழுப்பது சரியல்ல. இது முறையே இல்லை. மிக முக்கியமான பிரச்சினை, வெள்ளச் சேதம் பற்றிய ஒரு பிரச்சினையை இங்கே எடுக்க இருக்கிறேன். அது பொதுமக்களுடைய பிரச்சினை. பொது மக்களுடைய பிரச்சினையை எடுக்கும்போது (குறுக்கீடு) இதை நான் அனுமதிக்க முடியாது. ஏதோ ஒரு பத்திரிகையில் வந்ததையெல்லாம் எழுப்ப முடியாது.(குறுக்கீடு) என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் என்ன பேசினாலும் அது அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) இல்லை, இது தனிப்பட்ட பிரச்சினை. தனிப்பட்ட பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டுமென்று கேட்டீர்கள். நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) இதை நான் அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்காத · பிரச்சினையை நீங்கள் இவ்வாறு வற்புறுத்துவது சரியல்ல. (குறுக்கீடு) அன்றே நான் அனுமதிக்க மறுத்தேன். (குறுக்கீடு) இன்றைக்கும் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஈஸ்வரன், நீங்கள் எதுவுமே கொடுக்காமல் இப்படி எழுந்து பேசினால் என்ன அர்த்தம்? நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. இது முறையற்ற தன்மை. இந்த முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது. இதை அனுமதிக்காத நிலையில் நீங்கள் எழுந்து நின்று பேசிக் கொண்டிருப்பது முறையல்ல.

நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) தனிப்பட்ட பிரச்சினை இது. தனிப்பட்ட பிரச்சினையை இங்கே எழுப்பி அவையின் நேரத்தை வீணாக்கக் கூடாது. வெள்ளச் சேதம் பற்றிய பிரச்சினையை இங்கே எடுப்பதாக இருக்கிறேன். (குறுக்கீடு) இதைவிட அது ஒன்றும் முக்கியமில்லை. இது பொது மக்களுடைய பிரச்சினை. (குறுக்கீடு) வெள்ளச் சேதம் பற்றிய ஒரு பிரச்சினையை நான் இங்கே எடுக்க இருக்கிறேன். (குறுக்கீடு) அதிலே இந்த அளவுக்குக் குறுக்கிடுவது முறையல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல. இதை நான் அனுமதிக்கவில்லை. நான் அனுமதிக்கவில்லை என்றால் நீங்கள் உட்கார வேண்டியதுதான். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) அனுமதி இல்லை. அனுமதிக்காத பிரச்சினையை எழுப்ப முடியாது (குறுக்கீடுகள்) அண்மையில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை; நான் அனுமதிக்காத பிரச்சினையில் பேச முடியாது. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

[*1994 நவம்பர் 7*

முற்பகல் 11–05

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம். *(குறுக்கீடுகள்)* நான் அனுமதிக்கவில்லை. *(குறுக்கீடுகள்)* அனுமதிக்கவில்லை என்றால் எதிர்க் கட்சித் தலைவர் வெளிநடப்புச் செய்கிறேன் என்கிறார்; *(குறுக்கீடுகள்)* வெளிநடப்புச் செய்யலாம். *(குறுக்கீடுகள்)* நான் அனுமதி மறுத்து இருக்கிறபோது, நீங்கள் அனுமதி இல்லாமல் பேசிக்கொண்டு இருப்பது முறையல்ல. வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு நீங்கள் போகலாம். *(குறுக்கீடுகள்)* என்னுடைய அனுமதி இல்லாமல் திருமதி. பொன்னம்மாள் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. *(குறுக்கீடுகள்)* திரு. குமாரதாஸ், சம்பந்தம் இல்லாமல் உறுப்பினர்களோடு மோதுவது சரியல்ல; நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். *(குறுக்கீடுகள்)* இல்லை. திரு. குமாரதாஸ், நீங்கள் முறைகேடாக எழுந்து நிற்கிறீர்கள்; எழுந்து நின்று மற்ற உறுப்பினர்களோடு மோதுவது சரியல்ல. *(குறுக்கீடுகள்)* எதற்காக நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள் ? எழுந்து நிற்க அனுமதி யார் கொடுத்தது உங்களுக்கு ? *(குறுக்கீடுகள்)* அனுமதி எதுவும் கேட்காமல், நீங்கள் எழுந்து நிற்பது தவறு ; நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். *(குறுக்கீடுகள்)* திரு. குமாரதாஸ், உறுப்பினர்களோடு நீங்கள் ஏன் மோதுகிறீர்கள் ?

இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. *(குறுக்கீடுகள்)* எதிர்க் கட்சித் தலைவர், நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள் என்றால், செய்யலாம். *(குறுக்கீடுகள்)* நான் அனுமதிக்கவில்லையே. நான் அனுமதிக்காததற்கு எப்படி வெளிநடப்புச் செய்ய முடியும் ? *(குறுக்கீடுகள்)*

(திரு. ஆர். சிங்காரம், திரு. கே. செல்வராஜ், திரு. கே.கே. சின்னப்பன், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. இரா. அப்பு நடேசன், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியவர்களைத் தவிர காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 நவம்பர் 7] [பேரவைத் தலைவர்]

இப்போது இங்கே தனிப்பட்ட ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு திருமதி. பொன்னம்மாள் அவர்கள் என்னிடத்திலே அனுமதி கேட்டார்கள், ஆனால், அதற்கு அனுமதி மறுத்து இருந்தேன். மறுத்ததை மீறி அவர்கள் பேசத் துவங்கிய நேரத்திலேயும், எதிர்க் கட்சித் தலைவர் வெளிநடப்புச் செய்யப் போவதாகச் சொல்லிய நேரத்திலேயும் அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

அண்மையில் புயல் பெருமழையால் சேதம் ஏற்பட்டுள்ளது குறித்தும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் ஏற்பட்ட புயல், பெய்த பெரு மழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் அரசாங்கம் எடுத்துள்ள நிவாரண நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப வேண்டும் என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருந்தார்கள். அந்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டு அவர்களை அதுபற்றி இங்கே எழுப்பலாம் என்று அனுமதி அளித்து இருந்தேன். அவர்கள் இங்கே எழுப்பலாம். திரு. சி. ஞானசேகரன்; அவர் இப்போதுதான் வெளியே போகிறார். திரு. பலராமன், திரு. அ. செல்வராசன், டாக்டர் குமாரதாஸ் அவையில் இல்லை. இதே பொருள்பற்றி பேரவையில் எழுப்புவதற்கு 55-வது விதியின் கீழ் அனுமதி கேட்டு இருந்த திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த புயலாலும், மழையாலும் ஆயிரக்கணக்கான குடிசைகளும், பொருட்களும் சேதமடைந்தன. ஆனால், தமிழ்நாடு அரசு தன்னால் இயன்ற அளவுக்கு மக்களுக்கு அந்த வெள்ள நிவாரண வேலைகளைச் செய்தது. ஆனால், நமது தமிழ்நாட்டிலிருந்து வரிப் பணங்களை வாங்கிக்கொண்டு, அதிக அளவில் வரியை வாங்கிக்கொண்டு இருக்கின்ற மத்திய அரசு மாற்றான் தாய்ப் பிள்ளை போல், தமிழ்நாடு அரசுக்கு மத்திய நிவாரண